செ.சிவநாயகம் அண்ணாவியார் நினைவுமலர் வெளியீடு - மூன்றாவதுகண்

# மூன்றாவது கண்


# செய்தி

எங்களின் அறிவில்
எங்களின் திறனில்
தங்கி நிற்போம் நாங்கள்
எங்களின் நிலத்தில்
எங்களின் விதைப்பில்
விளைவித்தே வாழ்வோம்
கட்டுப்படுத்தும் வாழ்க்கை
முறைகளை
நீக்கி எழுந்திடுவோம்
சூழலிலிணைந்துவாழும்வழிகளை
மீளவும் ஆக்கிடுவோம்.

சி.ஜெயசங்கர்

மடல் - VI மார்கழி 2023

உலகங்கள் தழுவிய உள்ளூர்களின் செய்திகளுக்கான மடல்



மடல் உருவாக்க பரிமாற்ற குழாம்

*சி. ஜெயசங்கர்*
*து. கௌரீஸ்வரன்*
*இரா. சுலக்ஷனா*

**அஞ்சல்**

**23/1, நெசவுநிலையவீதி**

**மஞ்சந்தொடுவாய்,**

**மட்டக்களப்பு.**

# விடுதலைக்கான அறிவுருவாக்கமும் ஏட்டண்ணாவியார் செ.சிவநாயகமும்.

செல்லையா சிவநாயகம் அவர்கள் உள்ளூர் புலமைமரபின் வலுவான கண்ணிகளில் ஒருவர். கூத்து, சடங்கு என்பவற்றில் அவரது தாடனம் மதிக்கப்படுவது. கூத்து, சடங்கு சார்ந்த தளங்களில் முன்னின்று இயங்குபவராகவும், ஆற்றுப்படுத்துபவராகவும் அவரது பணி கற்றலுக்குரியது.

செ.சிவநாயகம் அவர்கள் மேற்படி விடயங்கள் சார்ந்து படைப்பாளராகவும், ஆய்வாளராகவும், கட்டுரையாளராகவும், கருத்துருவாக்குபவராக-வும் மிகவும் வலுவான பங்களிப்பை செய்திருப்பவர். அவரது ஆக்கங்கள் முனைவர்பட்ட ஆய்வொன்றிற்கு உரியதாக இருந்துவருவது கவனத்திற்கொள்ளப்பட வேண்டியது.

உள்ளூர்ச் சிந்தனை மரபு என்பது ஆதிக்க நீக்க நோக்கிலான புதிய சிந்தனை மரபுகளுடனான ஊடாட்டத்திலும் நவீன சிந்தனை மரபு என்ற பெயரில் காலனிய ஆதிக்க சிந்தனை மரபுகளுடனான ஊடாட்டத்திலும் எத்தகைய எதிர்வினையை ஆற்றியிருக்கிறது, ஆற்றிவருகிறது என்பதை விளங்கிக்கொள்வதற்கும், விளக்குவதற்குமான மிகப்பொருத்தமான ஆளாகவும் ஆளுமையாக -வும் செ.சிவநாயகம் அவர்கள் விளங்குவது குறிப்பிடப்பட வேண்டியது.



நவீன ஆய்வறிவுப் பரப்பில் உள்ளூர் அறிவு திறன் சார்ந்த ஆற்றல்களும் ஆளுமைகளும் பண்பாட்டுச் சிதைப்பிற்கு உள்ளாக்கப்பட்டு புறம்தள்ளப்பட்டுள்ளமையே இந்த 21ஆம் நூற்றாண்டு வரை தொடர்கதையாக இருக்கின்றது.

நவீனம் என்ற பெயரில் காலனிய ஆதிக்கம் தமது ஆதிக்க மற்றும் வணிகத்தின் நிலைத்து நிற்பிற்கு சவாலான உள்ளூர் அறிவு முறைகளை விஞ்ஞான பூர்வமற்றவை, பாமரத்தனமானவை எனப் பலவகைகளிலும் சிதைப்பிற்கு உள்ளாக்கி, அது சார்

ஆளுமைகள் என முத்திரை குத்திக் கீழ்நிலைப்படுத்தி, அக்கீழ்நிலைப்படுத்தும் கைங்கரியத்தை எம்மீது திணித்து, நாங்கள் விரும்பி ஏற்றுக் கொண்டிருக்கும் அவர்களது நிலைத்து நிற்கும் ஆதிக்க நோக்கிலான கல்வி முறையைக் கொண்டாடி வருபவர்களாக இருக்கிறோம்.

அதேவேளை தொன்மையான வரலாறு கொண்டவர்களென அறிவுபூர்வ அகழ்வாய்வு, நிறமூர்த்த வழி ஆய்வுவழி அறிந்து, அறிவித்து கொண்டாடும் தமிழர் சமூகங்களின் நவீன அறிவு முறை சூழலுக்குள் கல்வி நிறுவனங்களுக்குள் அடுக்கப்படாதவையாக விலத்தி வைக்கப்பட வேண்டியவையாக தீண்டத்தகாதவையாகவே ஆயிரம் ஆண்டு கால வரலாறுகள் கொண்டதும் நடைமுறையில் இன்றளவும் இருந்து வருவதுமான உள்ளூர் அறிவு முறைகள் கணிக்கப்பட்டும் கையாளப்பட்டும் வருகின்றன.

நாங்களே எங்களது அறிவு முறை, எங்களது மொழி சார்ந்து புற மொழிக்கும் அல்லது விலத்தி வைக்கும் அல்லது அகற்றிவிடும் கொள்கையுடையவர்களாக
வடிவமைக்கப்பட்டு வாழ்ந்து வருகின்றோம்.

21ம் நூற்றாண்டில் நிலைபேறுடையதும் ஆதிக்க நீக்கம் பெற்றதுமான வாழ்வை உருவாக்குவதற்கான அறிவுசார் இயக்கத்தில் மேற்படி விடயம் உரத்து உடையாடப்பட வேண்டியதும், மாற்றத்திற்கான செயற்பாடுகள் பரவலாக்கமும் வலுவாக்கவும் பெறவேண்டியது அடிப்படைத் தேவையாகும்.

இதற்குப் பல்வேறு துறைகள் சார்ந்தும் செ.சிவநாயகம் போன்ற உள்ளூர் ஆளுமைகளை அறிதலும், உரையாடுதலுக்கு கொண்டு வருதலும் அடிப்படையானதாகும்.

உள்ளூர் அறிவு முறைகளின் அதிகாரக் குரல்களாக தம்மை முன்னிறுத்தி அனுகூலங்களை கறந்து கொள்ளும் நவீன ஏட்டுச் சுரக்காய் ஆட்கள் இதற்கு எதிராக இயங்குவது எதிர் கொள்ளப்பட வேண்டியது.

கூத்து சார்ந்து இந்த விடயம் பல சவால்கள், தனிப்பட்ட பாதிப்புக்கள் கடந்து நிலைநிறுத்தப்பட்டதாயிற்று. சடங்குகள் சார்ந்து உள்ளூர் பூசாரிகளின் குரலும், இடமும் வலுவாக்கப்பட்டிருக்கின்றது. கூட்டு உரையாடல் செயற்பாடுகளுக்கு ஊடாக மேற்படி அறிவு முறை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மீளுருவாக்கம் (Reformulation) கூத்து சார்ந்து கூத்து மீளுருவாக்கமாக பரிணமித்திருக்கிறது. அவ்வாறு பல்வேறு துறைகள் சார்ந்தும் மீளுருவாக்கச் செயற்பாடுகளும் முன்னெடுப்புக்களும் பிரதேசந்தழுவிய, தேசந்தழுவிய, உலகந்த -ழுவிய வலைப்பின்னல்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

உள்ளக சவால்கள் கடந்து கூத்து சடங்கு என்பவை கிழக்கின் உயர்கல்வி நிறுவனங்களுள் நிலைபெற்று முன்னெடு -க்கப்பட்டுவரினும் ஏனைய துறைகள், பீடங்கள் சார்ந்து உள்ளூர் அறிவு முறைகள் விலக்கி வைக்கப்பட்டவையாக அல்லது அறியவேபடாத, அறியத்தேவையில்லாத விடயமாகவே மிகவும் உறுதியாக இருந்து வருவது காலனியத்தின் வலிமையை

உணரவும் அறியவும் வைப்பதாக இருக்கின்றது.

இதை Epistemic Apartheid (அறிவுசார் நிறவெறி) என்று கூறுவது மிகவும் பொருந்துவதாக இருக்கும். எங்களை அடிமைப்படுத்தி வைத்திருப்பதை விரும்பி ஏற்பதும்; எம்மில் நாங்கள் தங்கி வாழ்வதை விலக்கி வைப்பதுமான சூழல் எந்தவிதமான கொண்டாட்டத்திற்கு உரியது?! எந்தவிதமான பெருமித்தத்திற்கான உரியது?!

இத்தகைய மிகவும் உணர்திறனுடைய, விடுதலை நோக்குடைய அறிவியல் இயக்கத்தில் பங்காளராக இயங்கும் பல்வேறு ஆளுமைகளில் செ.சிவநாயகத்தின் இருப்பும், இயக்கமும் முன்னுதாரணமானதும்: ஆய்வுக்குரியதும் ஆகும்.



(Participatory Action Research) தொல் குடிகளின் ஆய்வு முறைகள் (Indigenous Research Methodologies) ஆய்வாக ஆற்றுகை Performance as Research) ஒடுக்கப்பட்வர்களுக்கான ஆய்வு முறைகள் Methodologies of the Oppressed) பெண்ணிலைவாத ஆய்வு முறைகள் (Feminist Research Methodologies) என பல வகையான ஆய்வு முறைகளும்; எண்ணக்கருக்களும் உள்வாங்கப்பட்டு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் சார்ந்து செ.சிவநாயகம் அவர்களது விரிவான நேர்காணல் செய்யப்படாதது பெரும் குறையே ஆகும். அவரது அபரிவிதமான எழுத்துக்கள் மூலமாக இவற்றைக் கண்டடையலாம் என்பது ஆறுதலாகும்.

அனைத்துத் துறைகள் சார்ந்தும் உள்ளூர் மரபுகளின் ஆளுமைகளுடன் இணைந்த அறிவுப் பயணம் என்பது நிலைத்து நிற்கும் வாழ்விற்கு அவசியம் என்பது அறியப்பட வேண்டியது. இந்த வகையில் செ.சிவநாயகம் அவர்களை நினைவுகூறுதல் விடுதலை-க்கான அறிவுருவாக்க முன்னெடுப்பின் அம்சமாக இருக்கும்.

**பேராசிரியர்.சி.ஜெயசங்கர்.**

# உள்ளூர் ஆளுமை ஏட்டண்ணாவியார் செ.சிவநாயகம் - ஓர் அஞ்சலிக் குறிப்பு

ஏட்டண்ணாவியார் செ. சிவநாயகம் மாமா இயற்கையடைந்த செய்தி இன்று (14.11.2023) அதிகாலை கிடைத்தது. அவருடைய இழப்பு நமது ஊருக்கும், நமது வடமோடிக் கூத்து மரபிற்கும் பேரிழப்பாகும். மட்டக்களப்பு ஏறாவூரைப் பிறப்பிடமாகவும், சீலாமுனையை வசிப்பிடமாகவும் கொண்ட அகவை 75 ஐ அடைந்துள்ள இவர் எழுதுவினைஞராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற அரச அலுவலராவார்.

நன்கு கல்விகற்று அரச தொழிலைப் பெற்றதாலும், ஊரைவிட்டு வேறு இடம்சென்று வாழக்கூடிய ஏதுநிலைகள் இருந்த போதிலும் அவர் அவ்வாறு வாழ விரும்பவில்லை மாறாக எத்தகைய சவால்கள் வந்தாலும் அவற்றையெல்லாம் எதிர்கொண்டு ஊரிலேயே வாழ்ந்து ஊருக்கும் சமூகத்திற்குந் தன்னாலான பணிகளைச் செய்வதில் மிகவும் உறுதியாக இருந்தவர். வெளியிலிருந்து ஊரைப் பார்க்காமல் ஊரிலிருந்தே உலகத்தைப் பார்த்தவர். உலகெங்கிலுமிரு-ந்து பல்வேறு அரங்கியலாளர்கள் தன்னில்லம் நோக்கி வருவதற்குரிய நிலையினை உருவாக்கியவர். பிற மாவட்டங்களில் தொழில் செய்த காலத்திலும் ஊர்க்கோவிலின் சடங்குகளிலும், ஊரின் கூத்தரங்க நடவடிக்கைகளிலும் ஆர்வத்துடன் முக்கியமான பங்களிப்பை நல்கியவர்.

எங்கள் ஊரினதும், சமூகத்தினதும், கோவிலின் சடங்குப்பண்பாட்டினதும் பல்வேறு அரிய தகவல்களையும், ஆவணங்களையும் தன்னுள் அடக்கிய ஓர் ஆளுமையாக இயங்கியவர். தான் பெற்ற அறிவையும் ஆளுமைகளையும் தன்னுடன் மட்டும் வைத்திருக்காமல் அவற்றை இளந்தலை-முறையினருக்குக் கையளிப்பதில் மிகுந்த ஆர்வமுடன் செயற்பட்டவர். புதிய தலைமுறையினர் இத்தகைய தேடல்களில்



ஆர்வஞ் செலுத்தாத போதும் அவர்களுக்குத் தொடர்ந்து அன்புத்தொல்லை கொடுத்துத் தன்னிடமுள்ள முக்கியமான தகவல்களையும் விடயங்களையும் பயிற்றுவித்தவர். எனக்குப் பதின்மூன்று வயதாக இருக்கும் போது என்னை அவர் இல்லத்திற்கு அழைத்து பேனாவும் குறிப்பேடும் தந்து மாரியம்மனுக்குப் பாடும் சின்னக் காவியத்தைப் பாடிக்காட்டி அதனை எழுத வைத்தவர், எனது கையெழுத்தைப் பார்த்துவிட்டு அழகாக எழுதுகிறாய் என்று பாராட்டி என்னைத் தட்டிக்கொடுத்தவர்,

நமது தெய்வங்களுக்குப் பாடும் விருத்தப் பாக்களைப் பாடிக்காட்டிப் பயிற்றுவித்தவர். கோவிலில் தான் பாடும் போது சிறுவனாக இருந்த என்னையும் அவர் அருகில் அழைத்து அவருடன் சேர்ந்து பாடப் பயிற்றுவித்தவர். நான் இன்று ஓரளவுக்கு எங்களூர் கோவில் சடங்கில் பாடல்களைப் பாடுகின்றேன் என்றால் அதற்குக் களமமைத்து என்னை வழிப்படுத்திய குருநாதர் சிவநாயகம் மாமாவே ஆவார்.

ஆக்கபூர்வமான இலக்குடனும், நோக்கங்-களுடனும் சமூகஞ்சார்ந்து செயற்படும் போது ஏற்படும் அகப்புறச் சவால்களை எவ்வாறு எதிர்கொள்ள வேண்டும் என்பதைத் தனது அனுபவங்கள் வாயிலாக எமக்குச் சொல்லித் தந்தவர். சவால்களைக் கண்டு ஒதுங்கிவிடாது, இருக்கும் வாய்ப்புக்களைப் பயன்படுத்தி எவ்வாறு முன்செல்வது என்பதைக் கற்றுத் தந்தவர்.

ஒரு தேசத்தின் எதார்த்தமான இயக்கம் என்பது வெகுசன வெளியில் பெரிதாகத் தம்மை இனங்காட்டாது நுண்ணளவுகளில் தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும் உள்ளூர்களின் ஆளுமைகளினுடைய செயற்பாடுகளினாலேயே நடைபெற்று வருகின்றது என்பதை சமூகவியல் அறிஞர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். இதற்கிணங்க இயங்கிக்கொண்டிருந்த ஓர் உள்ளூர் ஆளுமையாகச் சிவநாயகம் மாமா நமக்குக் காட்சியளிக்கின்றார்.

சிவநாயகம் மாமாவின் இல்லம் நம்மூரின் செவிவழி மரபையும், எழுத்துவழி மரபையும் கட்டிக்காத்த பாரம்பரியத்தைக் கொண்ட வீடாகும். நவீன கல்வி கற்றுத் தேறியவர் என்பதால் ஊரில் நடைபெறும் சம்பவங்களையும் செவிவழிக் கதைகளையும் அவ்வப்போது எழுத்தில் குறித்து வைத்திருந்தவர். பழைய கூத்துப்பனுவல்கள், பத்ததிச் சடங்குப்பண்பாட்டுடன் தொடர்புடைய பழைய ஏடுகள் எனப்பல்வேறு ஆவணங்களைச் சூறாவளி, போர், சுனாமி முதலான அனர்த்தங்களிலிருந்தும் பாதுகாத்து வந்தவர்.

1990களில் போர் உக்கிரமடைந்திருந்த நாட்களில் பிரதான சாலையோரத்தில் வாழ்ந்த நாங்களும் நம்மைப் போன்றவர்களும் பாதுகாப்பிற்காக வீட்டை விட்டு ஓடிய போது எமக்கெல்லாம் அடைக்கலம் வழங்கிய இடமாகச் செ.சிவநாயகம் மாமாவின் பூர்வீக இல்லம் அமைந்திருந்தது. (இவ்வில்லம் சுனாமியில் அழிவடைந்து விட்டது) போரின் பயங்கரங்களுக்கு மத்தியிலும் ஆக்கபூர்வமாக வாழ்வதற்கான வாழ்வியலை அவருடைய இல்லம் பயிற்றுவித்தது. உதாரணமாக இரவில் தேவாரங்கள் பாடுதல், பாடப்புத்தகங்களைப் படித்தல் எனும் செயற்பாடுகளை ஊக்குவித்துச் சிறுவர்களை நல்வழிப்படுத்தும் இல்லமாக அது விளங்கியது.

சிவநாயகம் மாமாவின் முக்கியத்துவம் அவருடைய கூத்தரங்க நடவடிக்கைகளில் காணப்படுகின்றது. 1990 களில் எங்களது ஊரில் தருமபுத்திரன் எனும் வடமோடிக் கூத்தினைப் பயில முனைந்தபோது அதற்கான பனுவல் கிடைக்கவில்லை. எப்படியாவது தருமபுத்திரனைத்தான் ஆட வேண்டும் என்ற கூத்தர்களின் விருப்பம், பனுவலைப்பெறப் பல முயற்சிகள்... எதுவும் கைகூடவில்லை. அப்போது சிவநாயகம் மாமா கண்பார்வையற்ற மூத்த அண்ணாவியார் கிருஸ்ணப்பிள்ளை அவர்களுடன் சேர்ந்து நினைவிலுள்ள தருமபுத்திரன் கூத்தினை மீள எழுதும் பணியைத் துணிவுடன் ஆரம்பித்தார். ஒருமாத காலத்திற்குள் பனுவல் எழுதி முடித்தார். கூத்துப் பயிலப்பட்டு, பிரமாண்டமாக அரங்கேறியது. இதனூடாக சிவநாயகம் மாமா தான் இளம் வயதிலிருந்து கூத்துக்களரிகளில் ஏடுபார்த்து வந்தமையின் அனுபவத்தை மற்றுமொரு பரிமாணத்திற்கு இட்டுச்சென்றிருந்தார். அதாவது அவர் ஏட்டண்ணாவியாராக உயர்வடைந்தார்.

பின்னர் 2002 ஆம் ஆண்டில் தமிழ்க் கூத்தரங்க வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட கூத்து மீளுருவாக்கத்திற்கான பங்குகொள் ஆய்வுச்செயற்பாட்டில் முக்கிய நபராக சிவநாயகம் மாமா மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றத் தொடங்கினார். தான் கண்பார்வையிழந்த கிருஸ்ணப்பிள்ளை

அண்ணாவியாருடன் சேர்ந்து எழுதித்தொகுத்த தருமபுத்திரன் கூத்துப் பனுவலைக் கட்டவிழ்த்து அதனைச் சமகாலத்தின் கருத்துநிலைகளுடன் பொருத்திப்பார்த்து காலத்தின் தேவைக்கேற்ப மீளுருவாக்கஞ் செய்யும் ஆய்வுச்செயற்பாட்டில் ஈடுபட்டார். இதற்காகத் தனது ஐம்பத்தைந்தாவது வயதின் பின்னர் மகாபாரதம், இராமாயணம் பற்றிய மாற்று எழுத்துக்களை நிறையவே வாசித்தார், ஆய்வாளர் சி.ஜெயசங்கருடனும் அரங்கியலாளர்கள் பலருடனும் நிறையவே உரையாடினார், விவாதித்தார், பல அண்ணாவிமார்களுடன் கலந்துரையாடினார், பல்வேறு கருத்தரங்குகளுக்குச் சென்று வந்தார் இவ்வாறு தொடர்ச்சியாகப் பல்வேறு தளங்களில் பல்வேறு விடயங்களைக் கற்றுக்கொண்டதனூடாகப் பொதுவாக இதிகாச, புராணக் கதையாடல்களினதும் குறிப்பாக தருமபுத்திரன் கூத்தினதும் ஆதிக்க அரசியல் கட்டுருவாக்கத்தை விளங்கிக் கொண்டார். அதன் ஆதிக்கக் கட்டமைப்பைக் கேள்விக்குட்படுத்தி தருமபுத்திரன் பனுவலை மீளுருவாக்க வேண்டும் என்பதில் அயராது இயங்கினார். இதற்காக ஆய்வாளருடனும், ஆய்வுச்செயற்பாட்டில் பங்கெடுத்த பலருடனும் தொடர்ந்து பயணித்தார் நிறைவில் ‘சிம்மாசனப்போர்’ எனும் மீளுருவாக்கஞ் செய்யப்பட்ட கூத்துப்பனுவலை குழுநிலைக் கலந்துரையாடல்களுடாக எழுத்தில் கொண்டு வந்தார்.

இதன் பின்னர் கலந்துரையாடல்கள் மூலமாக வாளவீமன் வடமோடிக் கூத்துப் பனுவலை மீளுருவாக்கி ‘அபிமன்யு இலக்கணன் வதம்’ என்ற பனுவலாக எழுதினார், இராம இராவண யுத்தத்தை ‘சீதை சூர்ப்பனகை வதை’ என மீளுருவாக்கினார், அல்லி அர்ச்சுனாவை ‘அல்லியின் எதிர்வாதம்’ என்று மீளுருவாக்கினார்.

இதைத்தொடர்ந்து தானே தனியாக ஏற்கெனவே உள்ள இதிகாசக் கதையம்சங்களைக் கொண்ட கூத்துப் பனுவல்களை எடுத்து மீளுருவாக்கத் தொடங்கினார். இதனூடாக குயலவன் நாடகத்தைச் ‘சீதையின் துயரம்” எனவும், நரகாசுரன் நாடகத்தை ‘சூழ்ச்சிக்குள் நரகாசுரன்” எனவும் இவர் மீளுருவாக்கித் தந்துள்ளார். இத்தோடு ‘சகுந்தலைக்கிட்ட சாபம்’’, ‘‘அதிர்வு கண்ட பிராமணன்’ ஆகிய கூத்துக்களையும் எழுதியுள்ளார். மட்டக்களப்பின் வரலாற்றிலே பேசப்படும் ஆட்சியாளர்களான ஆடகசவுந்தரி, புலியமாறன் ஆகியோருடைய கதைகளை உள்வாங்கி ‘ஆடகசௌந்தரி’’, ‘‘புலியமாறன் வீழ்ச்சி’’, என்ற வரலாற்றுக் கூத்துக்களையும் ஆக்கியுள்ளார். சிறுவர்களுக்கான கூத்தரங்கிற்குரிய பனுவல்களாக ‘‘மழைப்பழம்’, ‘‘கனகராசன் கனவுலகு’’, ‘‘வனராணி’’, “அன்னப்பட்சி” முதலிய கூத்துக்களையும் இவர் எழுதியுள்ளார்.

திரு சிவநாயகம் அவர்கள் நமது சூழலில் முற்போக்கான சிந்தனைகளை உள்வாங்கி அதற்கேற்ற வகையில் நமது உள்ளூர் கலைமரபுகளை காலாவதியாகாது காலத்திற்கேற்ற வகையில் தகவமைக்கும் ஓர் உள்ளூர் கலைஞனாகத் தன்னைத் தனது மேற்படி படைப்புக்கள் ஊடாக அடையாளங்காட்டி நிற்கின்றார். இந்த நிலைமாற்றம் தமிழரின் பாரம்பரிய அரங்க வரலாற்றில் கவனிப்பிற்கும் கற்கைக்கும் உரிய விடயமாக அரங்கியல் துறைசார்ந்த ஆராய்ச்சியாளர்களால் சுட்டிக்காட்ட -ப்பட்டுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வடமோடிக் கூத்தின் விதம் விதமான மெட்டுக்களை நினைவில் வைத்துப் பாடல்களை ஆக்குவதில் சிவநாயகம் அவர்கள் தேர்ச்சி பெற்றவராகத் திகழ்ந்தார். இவருடைய பனுவல்களில் பல்வேறு மெட்டுக்கள் காணப்படுவது தனிச்சிறப்பு. இவருடைய தொடர்ச்சியான இயக்கம் இவருடன் தொடர்ந்து இயங்கிய இளந்தலைமுறையினருக்குக் கூத்துப் பனுவல்களை எழுதும் ஆற்றலை வழங்கியுள்ளது.

மாறுவதே நியதி மாற்றம் ஒன்றே மாறாதது என்று தத்துவார்த்த விளக்கங்கொடுத்துக் கொண்டு நமது மரபுகளையும் வழக்காறுகளையும் ஒட்டுமொத்தமாகக்

காலங்கடந்தவை என்று நிராகரித்தவாறு காலனித்துவத்தினதும் நவீன முதலாளிய ஏகாதிபத்தியத்தினதும் இலக்குகளை நோக்கிய மாற்றங்களுக்குச் சேவை செய்வதிலிருந்து விலகி நமது மரபுகளையும் வழக்காறுகளையும் ஒட்டுமொத்தமாக நிராகரிக்காது அதிலுள்ள காலத்திற்குப் பொருந்தக்கூடியவற்றைக் கவனத்திற்கொண்டு தேவையற்றவற்றை நிராகரித்து சமகாலத்திற்குரியவாறு மீளுருவாக்கித் தகவமைக்கும் ஒரு காலனியநீக்கச் செயற்பாட்டாளராக திரு செ.சிவநாயகம் அவர்கள் உள்ளூர் கூத்தரங்கில் தனது பணியைச் செவ்வனே செய்துள்ளார் எனலாம் இது கற்கைக்குரிய விடயமாக மேலெழுந்து நிற்கின்றது. சிவநாயகம் அவர்களின் கடந்த இரண்டு தசாப்தகாலச் செயற்பாடுகளை ஆய்வு செய்யும் போது இதனை நாம் மேலும் தெளிவாக ஆய்ந்தறிய முடியும்.

இவ்வாறு தனது வாழ்நாளில் ஆக்கபூர்வமான செயற்பாடுகளுக்கு ஆதரவாகவும் தனக்குப் பின்னால் புதிய தலைமுறைகள் ஆளுமைகளாக வளருவதற்கு ஏற்ற வகையிலுந் தனது இயலுமைக்குட்பட்டுப் பணியாற்றிய செ.சிவநாயகம் அவர்கள் நமது வரலாற்றில் குறிப்பிடத்தகுந்த மரபுக்கலைஞனாகவும் உள்ளூர் ஆளுமை - யாகவும்பிரகாசித்துக்கொண்டிருப்பார்.

சென்று வாருங்கள் நமது கலைஞனே! நீங்கள் எதையும் தனியாக உங்களுடன் மட்டும் கொண்டு செல்லவில்லை மாறாக உங்கள் ஆளுமைகளை எங்களிடம் பரவலாக்கி பகிர்ந்து சென்றுள்ளீர்கள்...

உங்களிடமிருந்து கற்றவர்களின் செயற்பாடுகளினூடாக நீங்கள் என்றென்றும் நம்மத்தியில் அரூபமாக வாழ்ந்து கொண்டேயிருப்பீர்கள்...

**து.கௌரீஸ்வரன்**

# உள்ளூர் அறிவின் நீட்சி ஏட்டண்ணாவியார் செ.சிவநாயகம் அஞ்சலிக் குறிப்பு.




உருவாகியவரே ஏட்டண்ணாவியார் செ.சிவநாயகம் ஆவார். இவர் ஏறாவூரினை பிறப்பிடமாகவும் மட்டக்களப்பு சீலாமுனையை வசிப்பிடமாகவும் கொண்டவர். கூத்துமீளுருவாக்கச் செயற்பாடுகளில் இணைந்து செயற்பட்டதோடு தொடர்ந்து மீளுருவாக்கக் கூத்துக்களை எழுதி வந்தவராவார். வடமோடிக் கூத்தாளுமைகளி -ன் முக்கிய முதுசமான சிவநாயகம் மாமா 14.11.2023 அன்று காலை தனது 75அகவையில் இயற்கையின் பகுதியாய் தன்வாழ்தலை நிறைவுசெய்துள்ளார்.

சீலாமுனை கூத்தின் தொடர்ச்சியாய் நீண்ட காலத்தின் பின்னர் வடமோடிக் கூத்தினை மீண்டும் ஆடுவதற்கு துணைநின்றவர். அவரும் அவரது வீடும் மாணவர்களின் கற்றலுக்கான தளம். எப்போதும் எதுபற்றிப் பேசவும் ஆயத்தமாகியே இருப்பவர். பலதளத்திலும் செயற்படும் ஆளுமையாக அதிகார கருத்தாடல்களை விளங்கி கொள்பவராக அவற்றுக்கெதிராகச் செயற்படுபவராக இருந்தவர். இவரது எழுத்துக்களும் மீளுருவாக்க கூத்துக்களும் இதற்கான சான்றாதாரங்களாக உள்ளன. சமூக சாதிய அரசியலை கேள்விக்குட்படுத்தும் நோக்கில், பெண்ணிலை வாத நோக்கில் இதிகாச புராணங்களை அணுகுதல் அதிகாரத்திற்கான மாற்று வாசிப்பு செய்தல் போன்றவைகளை தன்னில் தன் எழுத்துக்களில் ஏற்படுத்திக் கொண்டவர். ஆக்கபூர்வமான மாற்றங்களை ஏற்கும் கலந்துரையாடல்களை ஏற்படுத்தும் இவரது செயற்பாட்டுத் தன்மை என்பது முக்கியமானது. தனி மனிதராக மட்டுமின்றி இச்சமூகத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளிலும் சேர்ந்தியங்கி செயற்படக்கூடியவர் இயல்பான ஆழமான மனிதர் அவர். இவர் எழுதும் வடமோடிக் மீளுருவாக்கக் கூத்துப் பனுவல்கள் எப்போதும் எல்லோருக்குமான உரையாடல்களாக அமையும். அவரது பனுவல்களை வாசித்து உரையாடுவதற்கான தளங்களைக் கொண்டதாக அவரது எழுத்துக்கள் காணப்படும். பல்தன்மையான கருத்துக்களை எழுத்துக்களில் காணலாம். ஏட்டண்ணாவியராக மட்டுமில்லாது கட்டு -ரையாளராகவும் பாடலாசியராகவும் சடங்குச்சூழலிலும் தன்னை இணைத்துக் கொண்டவர். மாணவர்களுக்கான ஆய்வுப் பொருளாக அவரது செயற்பாடுகளுள்ளன. அவரும் அவர் வீடும் மற்றொரு கல்விக்கூடமாய் செயற்ப்பட்டது. தன் அறிவினை அனைவருக்கும் பகிர்ந்து கொடுத்தவர். அவர் மனைவி அவருக்கான பக்கபலமாய் செயற்பட்டவர். சிவநாயகம் என்னும் ஆளுமை பல்தளங்களில் நிலைநிறுத்திக் கொள்ள பக்கபலமாய் நின்று செயற்பட்டவர் அவர் துணைவியாராவார். இன்றைய கல்விச் சூழல் உருவாக்க மறந்த பல ஆளுமைகளை பாரம்பரிய அறிவுமுறை உருவாக்கியுள்ளது. அவ்வாறு உருவாக்கியவ -ருள் ஒருவர்தான் செ.சிவநாயகம் ஆவார். எங்களுடன்தொடர்ந்து பயணித்த சிவநாயகம் மாமாவினை இழப்பின் துயரிடை, அவருடன் இணைந்து பகிர்ந்த மகிழ்வுடனும் துயரும் மனத்தோடும் நின்று வழிஅனுப்பி வைக்கின்றோம். அவர் அறிவின் தொடர்ச்சி எங்களுடன்பயணிக்கும்.

**கலாவதி கலைமகள்**

# ஈழத்து கலை இலக்கிய வெளியில் பெயர் சொல்லும் ஆளுமை அண்ணாவியார் சிவநாயகம்



உள்ளூர் புலவர் அண்ணாவியார் சிவநாயகம் தனது எழுத்து பயணத்தில் இருந்து விடைபெற்றுள்ள நிலையில் அவரது இழப்பு மட்டக்களப்பு கூத்தரங்கில் பெரும் இழப்பாகும். முடியாது, இயலாது என்றிராமல் இறுதிவரை தமது கலைப்பயணத்தினை தொடர்ந்து கொண்ட மனிதர் எழுதிக் கொண்டே இருந்தவர். இதுவரைக்கும் பதினைந்து கூத்துகளுக்கு மேல் எழுதியுள்ளார். அத்துடன் அதனை ஏட்டண்ணாவியராக இருந்து பழக்கியும் இருக்கிறார். புராண இதிகாச சிந்தனையின் சமூக பரவலாக்கம் ஆரிய கொள்கைகளை வெகுஜன படுத்தி மனிதர்களை மறுபக்க புரிதலுக்கு இடம் கொடுக்காத ஆதிக்க போக்கில், இவரது எழுத்துக்கள் வித்தியாசமான மாற்று முறைமை கொண்ட மறுபக்கப் பார்வையைக் கொண்டு காணப்படும்.

வழமையாக உள்ளூர் கலைஞர்களை இரண்டாம் நிலைப்படுத்தி பார்க்கும் நவீன, காலனிய சித்தாந்த சிந்தனைக்கு மத்தியில் பல கலைச் செயற்பாடுகளை செய்தது மட்டுமல்லாமல் பலரை தம் புலமையினால் இணைப்பாக்கம் செய்தும் இருந்தார்.

தனது வீட்டினை ஒரு பள்ளிக் கூடமாக மாற்றி சம கால உலகிற்கான மனிதர்களை உருவாக்கும் செயற்பாட்டினை மேற்கொண்டவர். இவை இன்றைய பரீட்சை மையப்பட்ட நவீன கல்விக்கு மாற்றான கொள்கையும் கூட. கூத்து மீளுருவாக்க செயற்பாட்டின் மூல கர்த்தா. மனித நேயம் கொண்டவர், உபசரிக்கும் தன்மை உள்ளவர், இருக்கின்றதை கொடுத்து உதவும் மாண்பு கொண்டவர், எல்லோரையும் ஊக்கப் படுத்துபவர் இக் கலைஞரின் கலைப்பயணம் தொடர்ந்து பேணப்பட்டு அடுத்தடுத்து பயன்படுத்த வேண்டியவை.

**குகநாதன்**

# அன்னப்பட்சி சிறுவர் கூத்தும் சிவநாயகம் அண்ணாவியாரும்




கூத்து மீளுருவாக்கத்தில் அண்ணாவியாரின் செயற்பாடுகள் மற்றும் அண்ணாவியாரின் அனுபவங்களைக் கேட்டு அறிந்துக் கொள்ளும் பெரும் பிரயத்தனத்தில் மேற்கொண்ட பிரவேசம் தான் அண்ணாவியாரின் ஆளுமை பற்றிய தெளிவை எனக்குப் பெற்றுக் கொடுத்திருந்தது. உண்மையில், ஆய்வொன்று சமூகத்திற்கென என்ன செய்துவிடமுடியும் என்ற கேள்விக்கு விடையாக அமைந்தவர் அண்ணாவியார் செ. சிவநாயகம்.

நவீன கல்வி, ஆய்வறிவு தகவல்களை பெற்றுக் கொள்வதற்கான நபர்களாக தனிநபர்களையும் சமுதாயத்தையும் அணுகுகின்ற பெரும்போக்கை கடைப்பிடிக்கி-ன்ற நிலையில், கூத்து மீளுருவாக்கம் பங்குகொள் ஆய்வு செயற்பாடு, சமூகமாற்றத்திற்கான அடித்தளத்தை வழங்கியிருக்கிறது. இந்த கூத்து மீளுருவாக்கச் செயற்பாடுகளில் முக்கிய பகுதியாக தன்னை இணைத்துக் கொண்ட அண்ணாவியார், தனிநபர் சிந்தனை மாற்றத்தில் தொடங்கி, சமுதாயமாற்ற-த்திற்கான பாதையில் தன்னை இணைத்துக் கொண்டவர் ஆவார்.

குறிப்பாக நவீன ஆய்வறிவு பரப்பு, சமூகத்திற்கும் செய்யப்படுகின்ற ஆய்வு-க்குமான பெரியதொரு இடைவெளியை தக்கவைத்துக் கொண்டிருக்கின்ற நிலையில், பங்குகொள் ஆய்வு செயற்பாடு, சமுதாயத்தின்

பங்குப்பற்றலோடு, சமுதாயமாற்றத்திற்கான பயணத்தை நோக்கி சமுதாயத்தை வழிப்படுத்தியிருக்கிறது. இதற்கு அண்ணாவி -யாரின் கூட்டாக எழுதப்பட்ட மீளுருவாக்க கூத்துக்களும், அண்ணாவியார் தனியாக எழுதிய மீளுருவாக்க கூத்துக்களும், அவரது கதைகளும் பாடல்களும் சான்று பகிர்கின்றன.

அன்னப்பட்சி சிறுவர் கூத்தின் போது தான் முழுமையாக அண்ணாவியாரின் ஆளுமை -யை என்னால் உணர்ந்துக் கொள்ள முடிந்தது. ஸுவான் பிரின்ஸஸ் எனும் பெயரில் ஆங்கில பத்திரிகை ஒன்றில் வெளியான கதையை அடிப்படையாகக் கொண்டு மீளுருவாக்கி உருவாக்கப்பட்ட சிறுவர் கூத்து தான் அன்னப்பட்சி சிறுவர் கூத்து.

கூத்து பயிலுகின்ற காலத்தில், பாடசாலை மாணவர்களுடன் சேர்ந்து நானும் பழகி பின்னர், கூத்தில் பாத்திரமேற்று ஆட வேண்டியிருந்தது.

பெரும்பாலும் கூத்து பயிற்சி அண்ணாவியாரின் வீட்டிலேயே இடம் பெறும். கூத்து பயிற்சி காலத்தில் ஒவ்வொரு நாளும் அவர் எங்கள் எல்லோருக்கும் முன்னர், தயாராக நிற்பார். கூத்து தொடங்கி முடியும் வரை எங்களோடு இருந்து எல்லா பாடல்களையும் தனித்தனியே திருத்தி, சொல்லியும் தருவார்.

அதுவரைக்கும் அண்ணவியாரின் கூத்து மீளுருவாக்கச் செயற்பாடுகளை அறிந்துக் கொள்ளும் ஆர்வத்தில், எங்களது பல்கலைக்கழக சிரேஸ்ட மாணவர்களோடு ஆரம்பித்து பின்னர் தனியே சென்றும் அண்ணாவியாரை சந்தித்து அவரது அனுபவங்களை கேட்டறிந்துக் கொண்டது -ண்டு. ஆனால் அன்னப்பட்சி கூத்து பயிற்சி இந்த கேட்டறிந்த அனுபவங்களை தாண்டி வித்தியாசமான புரிதலை எனக்கு ஏற்படுத்தியிருந்தது. உண்மையில் கூத்தரங் -கு என்று வருகின்றபோதும், சிறுவர் கூத்தரங்கு என்று வருகின்ற போதும் எவ்வாறு அவை திறந்தவெளி கல்விக்கூடமாக இருக்கின்றன என்பதையும், நவீன கல்வியறிவு எவற்றையெல்லாம் பாமரத்தனமானவை என புறமொதுக்கி வைத்திருக்கிறதோ அவை தொடர்பான உண்மை நிலைப்பாட்டையும் அறிவதற்கு வழிவகுத்திருந்தது. உண்மையில் பாடபுத்தகத்தை மனப்பாடமாக்கி ஒப்புவிப்பதோடு நிறைவடையும் நவீன கல்வி முறைக்கு மாறாக சேர்ந்து கற்றல், செவிவழியேறல், செய்து கற்றல் என்பவற்றிற்கான தளமாக கூத்தரங்கச் சூழல் இருப்பதை உணர்ந்து கொள்ள முடிந்தது.

எல்லாவற்றிற்கும் மேலாக பரீட்சை என்ற பெயரில் புள்ளிகளை மையப்படுத்தி, கெட்டிக்காரர், ஒன்றும் தெரியாதவர் என கூறுபோடுகின்ற கல்விமுறைக்கு அப்பால் சென்று சுமுகமாக, எந்தவித தயக்கமும் இன்றி பயிலுவதற்கான சூழலை கூத்து பயிற்சி காலத்தில் உணர்ந்துக் கொள்ள முடிந்தது.

உனக்கு ஒன்றும் தெரியாது, உனக்கு எதுவுமே வராது என்று ஒட்டுமொத்தமாக ஒதுக்கிவைக்கின்ற நிலைக்கு அப்பால் சென்று, உனக்கு எது முடியுமோ அதற்கு களம் அமைத்து கொடுக்கின்ற பன்முகத் தன்மையான கல்விச் சூழலை கூத்தரங்கச் சூழல் பெற்றுக் கொடுப்பதை அவதானிக்க முடிந்தது.

இந்தவகையில் அன்னப்பட்சி கூத்தரங்க பயிற்சி மேற்கொண்ட காலத்தில், அன்ன இளவரசி பாத்திரம் கானத்திற்கு சென்ற வேளையில், வேடன்விரித்த வலையில் சிக்கிக் கொண்டு மீள முடியாமல் இருந்த அன்ன இளவரசி புலம்பலாக வரும் பாடலை என்னால் பாடமுடியாது இருந்தபோது, அண்ணாவியார் மிக பக்குவமாக சொல்லி கொடுத்து பாட வைத்திருந்தார். இப்போதும் அன்னபட்சி கூத்து என்று சொல்லும் போது எனக்கு ஞாபகத்திற்கு வருவது அந்த பாடல் தான்.

"ஐயோ நான் என்ன செய்வேன்
அரும் பெரும் வனந்தனிலே –
அறியாமல் நானும் சிக்கி
அழுகிறேன் அழுகிறேனே."

இப்படி மிக பக்குவமாக கையாளும் திறனும், ஒவ்வொரு பாத்திரத்தையும் படைப்புருவாக்கம் செய்யும் போது அது தொடர்பாக அண்ணாவியாருக்கு இருந்த மிக ஆழமான புரிதலும், திறந்த கலந்துரையாடலுக்கு எப்போதும் வாய்ப்பளிக்கும் அந்த மனபக்குவமும் சமுதாயமாற்றத்தின் மிக முக்கிய முன்னெடுப்பாக பார்க்கப்பட வேண்டியது. அத்தகைய முன்னெடுப்புகளை தனது தனிப்பட்ட வாழ்க்கையிலும், சமுதாய மாற்றத்திற்காக வேண்டியும் முன்னெடுத்த ஆளுமை என்றவகையில், அண்ணாவியார் செ.சிவநாயகம் என்றும் நினைவுக்கூறப்பட வேண்டியவர்.

**இரா.சுலக்ஷனா**




உ

சிவாயநம

**என் நண்பனுக்கு கண்ணீர் நெகிழ்வு**


நண்பர் அமரர் செ.சிவநாயகம் மறைவு சீலாமுனையைக்கு மட்டுமல்ல மட்டக்களப்பு மாவட்டத்துக்கே பேரிழப்பாகும். இவர் மறைவு கேட்டு அறிஞர்கள், கல்விமான்கள், ஆன்மிகவாதிகள், பாமர மக்கள், அரசியல் பிரமுகர்கள் கவலையடைந்ததை காணலுற்றேன்.

சிறந்த மனிதனாக வாழ்ந்து சமூக பணிகளில் ஈடுபட்டு ராசி அண்ணன் மகளை இல்லறத் துணைவியாக்கி பண்புள்ள மக்களைப் பெற்று மகளை மருத்துவ உலகுக்கு தந்து இல்லறத்தை நல்லறமாக்கிய மனிதனாக வாழ்ந்து சிவபதமடைந்த என் நண்பனை மறக்கமுடியுமா?

அவர் ஆன்மா அம்பாள் பாதம் சரண்.

இவ்வண்ணம்,

சக்தி கே.குமாரதாஸ்
பிரதம பூசகர், செயலாளர்
மகமாரியம்மன் ஆலயம்,
செங்குந்தர் வீதி,
மட்டக்களப்பு.
06.12.2023



# உரிமைக்குரல் மீளுருவாக்கக் கூத்து



**சீதை சூர்ப்பனகை வதை – மீளுருவாக்க கூத்து**

இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய ஆற்றுகை வடிவமாக கூத்து காணப்படுகிறது. தமிழர்கள் செறிந்து வாழும் வடக்குக்கிழக்கு மற்றும் மலையகப் பகுதிகளிலும் இன்று வரை தொடர்ச்சியாக ஆடப்பட்டு வருகிறது. கூத்து சமூகமயப்பட்ட ஒருவிடயமாக காணப்படுவ -தால் தொடர்ச்சியாக அன்று தொட்டு இன்றுவரை உயிர்ப்புடன் ஆடப்பட்டு வருகிறது. அதிலும் குறிப்பாக கிழக்கிலங்கையில் மட்டக்களப்பு பிரதேசத்தில் அதிகப்படியான கூத்துக்கள் தொடர்ச்சியாக ஆடப்பட்டு வருகின்றன.

கூத்து என்பது சமூகத்துடன் இணைந்த ஒரு நீண்ட தொடர் செயற்பாட்டைக் கொண்டதா-கும். அச்செயற்பாடுகளாக ஊர்கூடி கதை தெரிதல், சட்டங்கொடுத்தல், தினக்கூத்து, சதங்கையணிவிழா, கிழமைக்கூத்து, வெள்ளுடுப்பு ஒத்திகை, அரங்கேற்றம், வீட்டுக்கு வீடு ஆடுதல், 2ம் களரி போன்ற கூத்துருவாக்கச் செயற்பாடுகள் அனைத்தும் சமூகத்தின் பங்களிப்புடனேயே நடைபெறும்.

எந்தவொரு ஆற்றுகைக்கும் அரங்கவெளி என்பது பிரதானமாகும். இவ்வரங்க வெளிகளே பார்வையாளரின் மனநிலையைத் தீர்மானிக்கின்றது. கூத்து காலங் காலமாக வட்டக்களரி எனும் வட்டவடிவான அரங்கில் ஆடப்படுகிறது. இதை பார்வையளர்கள் சுற்றிவர அமர்ந்து பார்ப்பார்கள். கூத்தானது காலங் காலமாக மகாபாரதம், இராமாயணம் போன்ற இதிகாச புராணங்களின் பிரதான

கதைகளையும், அவற்றின் கிளைக்கதை - களையும், கற்பனைக்கதைகளையும் கதைப்பொருளாகக் கொண்டு ஆற்றுகை செய்யப்பட்டு வருகின்றன. இவற்றில் முற்போக்கான கருத்துக்களும், பிற்போக்கான கருத்துக்களும் இணைந்தாகவே காணப்படு - கின்றன. இவற்றில் காணப்படும் பிற்போக்கான கருத்துக்கள் காலப்போக்கில் களையப்பட வேண்டியன, அவை களையப்பட்டும் கூத்துக்கள் உருவாக்கபட்டு வருவதும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

காலத்தின் மாற்றத்திற்கு இணங்க கூத்துக்களின் வடிவங்கள் மாற்றமடைந்து செல்வது மாற்றத்தின் நியதியாகும். இம்மாற்றங்கள் கூத்தின் கருத்தியல் சார்ந்தும், ஆற்றுகை சார்ந்தும் மேற்கொள்ளப்படுகின்றன. கருத்தியல் மற்றும் ஆற்றுகை சார்ந்த மாற்றங்களை கொண்ட கூத்துக்களாக மீளுருவாக்க கூத்துக்கள் காணப்படுகின்றன. பேராசிரியர் சி.ஜெயசங்கர் அவர்களால் 2002-2003ம் ஆண்டு காலப்பகுதிகளில் சீலாமுனைக் கிராமத்தில் மேற்கொள்ளப்பட்ட அவரது முதுதத்துவமானி ஆய்வினடியாக உருவானதே இக் கூத்துமீளுருவாக்கம் ஆகும். இது காலனிய நீக்க சிந்தனையை அடிப்படையாகக் கொண்டதாகும். கூத்தில் காணப்படும் பிற்போக்குத்தனமான விடயங்களான பெண்களை இழிவுபடுத்தல், விளிம்புநிலை சமூகப் பாத்திரங்களை நகைச்சுவை எனும் பெயரில் கேளிக்குள்ளாக்குதல் போன்ற பண்புகளை புறந்தள்ளி கருத்தியல் ரீதியாக மாற்றங்களை மேற்கொள்வதுடன் இணைந்ததாக ஆற்றுகையிலும் கருத்தியல் மாற்றத்தின் பலனாக மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு மீளுருவாக்க கூத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.

1965ம் ஆண்டளவில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடே கூத்து செம்மையாக்கம் அல்லது நவீனமயமாக்கம் ஆகும். இது கூத்தின் கருத்தியல் மற்றும் ஆற்றுகை ரீதியில் மாற்றங்களைக் கொண்டதாக உருவாக்கப்பட்டது.

எனினும் இங்கு பிரதானப்படுவது ஆற்றுகையில் மாற்றங்களே ஆகும். கூத்தை அடிப்படையாகக் கொண்ட ஆற்றுகைகள் முதன் முறையாக படச்சட்ட மேடையில் ஆடப்பட்டன. இது பார்வையாளரை நான்காவது சுவராகக் கொண்டு அவர்களின் சிந்தனையை கட்டுப்படுத்தியது. இச்செயற்பாடு மத்தியதரவர்க்க பார்வையாள -ர்களை மையப்படுத்தி நகரத்தில் காணப்படும் படச்சட்ட மேடைகளில் ஆற்றுகைகளிற்காக உருவாக்கப்பட்டமையால் கூத்தினை ஆடுபவர்களிற்கும் பார்வையாளர்களிற்கும் இடையிலான சமூக ஊடாட்டம் துண்டிக்கப்படலாயிற்று.

இந்தவகையில் மீளுருவாக்கத்தினூடாக உருவாக்கப்பட்ட கூத்தான உரிமைக்குரல் பெண்களின் உரிமையைக் கூறும் குரலாக ஏட்டண்ணாவியார் செ.சிவநாயகம் அவர்களால் எழுதப்பட்டுள்ளது. இக்கூத்தின் மூலக்கதையானது மகாபாரத கிளைக்கதை - யிலிருந்து பெற்றுக்கொள்ள -ப்பட்டதாகும். இக்கதையை நோக்கின் பாண்டிய வம்சாவளியில் வந்த அல்லி எனும் பெண்ணரசி வீரத்துடனும் விவேகத்துடனும் தனது நாட்டை ஆண்டு வருகிறாள். இவளின் அழகைப்பார்த்து, மயங்கிய பஞ்சபாண்ட- வர்களில் ஒருவனான அர்ஜுனன் அவளை

அடைய ஆசை கொள்கிறான். கிருஸ்ணன் துணையுடன் அவள் தூக்கத்திலிருக்கும் வேளையில் தாலி கட்டுகிறான். அர்ஜுனனால் கருவுறும் அல்லி அவனை ஏற்க மறுக்கும் தருவாயில் சாகாதேவனால் சிறைப்பிடிக்க -ப்பட்டு கூண்டில் அடைக்கப்படுகிறாள். பின்னர் அர்ஜுனனை மணப்பதாக இதிகாச கதை அமைகிறது. இதில் ஒரு பெண்ணிற்கு இழைக்கப்பட்ட அநீதி வெளிப்பட்டு நிற்கிறது. அவளை அவள் அனுமதியின்றி தாலி கட்டியவனையே அவள் மணப்பதாக கதை காணப்படுவது மிகுந்த பிற்போக்குத்தனமான விடயமாகும்.

இத்தகைய பிற்போக்குத்தனம் கொண்ட கதையை ஏட்டண்ணாவியார் செ.சிவநாயகம் அவர்கள் உரிமைக்குரல் எனும் பெயரில் முற்போக்குச் சிந்தனைகளை கொண்ட கதையாக்கி அதனை கூத்தாக எழுதியுள்ளார். அவர் எழுதிய கூத்தின் கதைப்படி அர்ஜுனனால் இந்நிலைக்கு ஆளான அல்லி அர்ஜுனனை கணவனாக ஏற்க மறுக்கிறாள். அதனால் சகாதேவனால் சிறைப்பிடிக்கப்பட்டு கூண்டில் அடைக்கப்படுகிறாள். அவ்வேளை -யில் அவளை சமாதானம் செய்து தன்னை மணக்க வைப்பதற்காக தனது மனைவிகளான திரௌபதை மற்றும் நாககன்னியை அனுப்புகிறான் அர்ஜுனன். ஆயினும் அவள் அவனை கணவனாக ஏற்க மறுக்கிறாள். அல்லி தனக்கு நிகழ்ந்த அநீதியை எடுத்துக்கூற, திரௌபதை மற்றும் நாககன்னி தமக்கு தம் கணவனால் இழைக்கப்பட்ட அநீதியை எண்ணுகின்றனர். திரௌபதை தன்னை சுயம்பரத்தில் வென்று மணந்த அர்ஜுனன் தன் தாயின் வாக்குக்கேற்ப தன் சகோதரர்கள் அடங்கலாக ஐவரிற்கு மனைவியாக ஆக்கியமை, தன்னை தன் அனுமதியின்றி கௌரவர்களுடனான சூது விளையாட்டில் பந்தயம் வைத்தமை மற்றும் சூதில் தோற்றமையால் துச்சாதனனால் துயிலுரிந்து அவமானப்படுத்தப்பட்டமை போன்றவற்றையும் நாககன்னி தனக்கு நடந்த அநீதி பற்றி எண்ணிப்பார்க்கும் போது அல்லியை அடையச்சென்ற வேளை அதைத்தடுக்க முற்பட்ட நாககன்னியை வற்புறுத்தி மணந்தமை பற்றியும் எண்ணி இருவரும் தமக்கு நிகழ்ந்தவை அநீதியென வருந்துகின்றனர். மேலும் காலதிகாலமாய் தம் போன்ற பெண் பாத்திரங்களை கூத்தில் இழிவாக படைத்தமையை எண்ணியும் வருந்துகின்றனர். இறுதியில் அல்லி சபையோரிடம் தனக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு நியாயம் கேட்கிறாள்.

*என்னையும் அறியாமல் உருவான குழந்தையை எப்படி ஏற்றுக்கொள்வேன்*

*குழந்தையை ஏற்றாலும் அர்ச்சுனனுக்கே தான் தந்தை என்ற உரிமை கொடேன்*

*நித்திரை தன்னில் திருட்டு தாலி கட்டிப் புணர்ந்ததாலே*

*இந்த இழிசெயல் சமூகம் தன்னிலே எவரும் ஏற்பாரோ*

*அதனால் நானுமே கருவை கலைத்திட முடிவு தான் எடுத்தேனே*

*உங்களில் ஒருவருக்கு இப்படி நடந்து விட்டால் என்னதான் செய்வீர்களோ*

***நல்லதொரு பதில்தான் நான் இங்கு அறியவே நலமுடன் சொல்வீரே***

இவ்வாறு சபையோரிடம் கேள்வி கேட்பதன் மூலம் தனக்கு நியாயம் தேடிக்கொள்ளும் பெண்ணாகவும், துணிச்சலான முடிவுகளை எடுக்கும் பெண்ணாகவும் அல்லி படைக்கப்பட்டுள்ளாள். மேலும் இதில் சபையோர் பங்குபற்றியதன் மூலம் அவர்கள் தமது அபிப்பிராயங்களை சொல்வது சமூகம் அநீதிக்குள்ளான பெண் மீது கொண்டுள்ள பார்வையையும் அவர்களது குரலையும் ஏட்டண்ணாவியார் செ.சிவநாயகம் வெளிக்கொணர்ந்தமை சிறந்த விடயமாகும். இது விவாத அரங்கப் போக்கை ஒத்ததாக காணப்படுகிறது.


இக்கூத்தில் மற்றொரு கவனிக்கத்தக்க விடயம் யாதெனினில் கூத்தில் உயர்நிலைப் பாத்திரமாக சித்தரிக்கப்படும் கட்டியக்காரன் பாத்திரத்துடன் கூத்தில் பயன்படுத்தப்படும் விளிம்புநிலைப் பாத்திரமாகிய பறையறை -வோன் பாத்திரமும் ஒரே நேரத்தில் களரியில் தோன்றும் வகையில் கூத்துப்பிரதி எழுதப்பட்டுள்ளமையாகும். பறையறையோன் எனும் விளிம்புநிலைப் பாத்திரம் வழமையாக ஆடப்பட்டு வரும் கூத்துக்களில் கள் அருந்திவிட்டு தள்ளாடி வருகின்றவாறும் (இதற்கேற்றவாறு தாளக்கட்டும் மெதுவான கதியில் காணப்படும்), குடித்துவிட்டு வந்து மனைவியுடன் வாக்குவாதப்படுவதாக அவனது செயற்பாடுகள் கேளிக்கை எனும் பெயரில் பார்வையாளரை மகிழ்விக்கும் நோக்குடனும் காணப்படும். இப்பறையறையோன் பாத்திர -த்தின் செயற்பாடுகளினூடு பறையர் சமூகத்தை இழிவுபடுத்தும் மறைமுக நோக்கும் கூத்துக்களில் காணப்படுகின்றது. இப்போக்கினை மாற்றும் நோக்கில் மீளுருவாக்க கூத்துக்களில் பறையறையோன் பாத்திரத்தை கம்பீரமாகக் காட்டுவதற்கு மெதுவான கதியிலமைந்த தாளக்கட்டை துரித கதியாக மாற்றி, தள்ளாட்டமான நடை துரிதமாக்கபட்டதன் பலனாக கம்பீரமான நடை கொண்டுவரப்பட்டு பாத்திரத்திற்கு கம்பீரத்தன்மையை ஏற்படுத்தப்பட்டது. இங்கு கூத்தின் ஆற்றுகைத் தன்மையான பாத்திர தாளக்கட்டின் கதியை துரிதமாக மாற்றியமைத்த போது பாத்திரத்தின் பண்பு மாற்றமடைந்தது. இதன் மூலம் மீளுருவாக்க கூத்துக்களில் பறையறைவோன் பாத்திரம் கௌரவமான நிலைக்கு கொண்டுவரப்பட்டு அப்பாத்திரத்தினூடு பறையர் சமூகமும் கௌரவமாக்கப்பட்டுள்ளது. மேலும் களரியில் தோன்றிய பறையறைவோன் தனது குலப்பெருமையையும், தனக்கான அரச பணி அரசனின் ஆணையை அறிவிப்பதே, இவ்வாறிருக்க கட்டியக்காரன் மற்றும் பறையறையோன்களான இருவரிற்குள் என்ன பிரச்சினை, ஒன்றாக இருவரும் இணைந்து அரசி வரவை அறிவிக்கும் வகையில் இம்மீளுருவாக்க கூத்து அமைக்கப்பட்டிருப்பது பறையறையோனை கம்பீரமானவனாகவும், தனக்கு வழங்கிய பணியை சரிவர செய்பவனாகவும் மீளுருவாக்க கூத்தில் கட்டமைக்கபட்டுள்ளமை பாராட்டத்தக்கது.

மேலும் புலவர்கள் பெண் பாத்திரங்களை தவறாக சித்தரிப்பது தொடர்பாகவும், அவ்வாறான கூத்துக்களை பல புலவர்கள் எழுதியிருந்தாலும் புகழேந்திப்புலவர் எழுதியதாகவே தவறாக கருதுகின்ற நிலை காணப்படுகிறது. இக்கருத்தை இம்மீளுருவா -க்கக் கூத்து மாற்றும் முயற்சியில்

புகழேந்திப்புலவரை களரியில் தோன்ற வைத்து, தான் இது போன்ற பிற்போக்கான கூத்துக்களை எழுதவில்லை என தன் பக்கத்து நியாயத்தை தானே விளக்குவதாக அமைத்தது கூத்திற்கு மேலும் வலுச்சேர்ப்பதாக அமைகிறது.

இக்கூத்தில் அநீதி இழைக்கப்பட்டு அதற்கான நீதி கேட்டும் துணிச்சல் மிகு பெண்ணாக அல்லி படைக்கப்பட்டது பாராட்டத்தக்க விடயமாகக் காணப்படினும் கதையில் அநீதி இழைக்கப்பட்ட அனைவரிற்கும் நீதி கிடைத்ததா என்பது சந்தேகமே! கூத்தின் கதையை நோக்கின் அதில் பிரதான பாத்திரமாக அல்லியை சுற்றியே கதை நிகழ்கிறது. அவள் தனக்கு இழைக்கப்பட்டது அநீதி என்பதை உணர்ந்து தனக்கு நியாயம் கேட்கிறாள். அதேவேளை சிறைக்கூண்டில் இருக்கும் அல்லியை சமாதானப்படுத்தி தம் கணவருடன் சேர்த்து வைக்க வரும் ஏனைய பெண்பாத்திரங்களான திரௌபதி மற்றும் நாககன்னி ஒரு கட்டத்தில் தமக்கு தம் கணவனால் இழைக்கப்பட்ட அநீதியை உணர்ந்தாலும், இக்கூத்தின் கதைப்படி அவர்கள் மணம் முடித்தபடியால் கணவனிற்கு கட்டுப்பட்டு அவன் தமக்கிழைத்த அநீதிகளை மறந்து, அவன் சொற்கேட்டு நடக்கும் வகையில் இருவரின் பாத்திரமும் படைக்கபட்டிருப்பது அனைத்து பெண்களிற்குமான நீதி இங்கு கிடைக்கப்படவில்லை என்பதை இங்கு உணர்த்தி நிற்கின்றது. அர்ஜுனனால் இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராய் அல்லியைப்போல் கேள்வி அவர்கள் எழுப்ப முன்வந்திருப்பின் இம்மீளுருவாக்கக்கூத்து பெயரிற்கேற்றால் அல்லியின் உரிமைக்குரலாக அல்லாமல் **அனைத்துப் பெண்களிற்குமான உரிமைக்குரலாக** அமைந்திருக்குமேயானால் இன்னமும் சிறப்பாக இருந்திருக்கும் என்பது என் தனிப்பட்ட கருத்து ஆகும்.

**ப.கண்ணன்**



# சிவநாயகம் அண்ணாவியாரின் படைப்புகள்

**கூட்டு படைப்பாக உருவான மீளுருவாக்க கூத்துப் பனுவல்கள்**

1. சிம்மாசனப்போர்
2. அபிமன்யு இலக்கணன் வதம்
3. சீதை சூர்ப்பனகை வதை
4. அல்லியின் எதிர்வாதம்
5. உரிமைக்குரல்

**அண்ணாவியார் தனியாக எழுதிய கூத்துப்பனுவல்கள்**

1. சீதையின் துயரம்
2. சூழ்ச்சிக்குள் நரகாசூரன்
3. சகுந்தலைக்கிட்ட சாபம்
4. அதிர்வு கண்ட பிராமணன்
5. சதிவதணன் மீட்ட சமூக மேம்பாடு
6. நரகாசூரன் வீழ்ச்சி

**வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பட்ட கூத்துப்பனுவல்கள்**

1. ஆடகசௌந்தரி
2. புலியமாறன் வீழ்ச்சி

**சிறுவர் கூத்துக்கள் ( கதை தழுவல்களும் தனியான முயற்சிகளும்)**

1. வனராணி
2. மழைப்பழம் (கிரிஜா கதை தழுவல்)
3. கனகராசன் கனவுலகு (பறப்பிழந்த வண்ணாத்துப்பூச்சி நாடக தழுவல்)
4. அன்னப்பட்சி ( ஸுவான் பிரின்சஸ் ஆங்கில கதை தழுவல்)

## கட்டுரைகள்

1. கூத்து மீளுருவாக்ககூத்துக்களின் கதைகள் தொடர்பான கட்டுரைகள்
2. சீதை சூர்ப்பனகை வதை வடமோடி கூத்து
3. மீளுருவாக்கப்பட்ட சிறுவர்களுக்கான மழைப்பழம் என்னும் வடமோடி கூத்து
4. சமூக அபிவிருத்தியில் அறிவியல் ரீதியில் பாரம்பரிய கூத்துக்கள்: மீளுருவாக்கத்தின் பரிணாம வளர்ச்சியும் அதன் எழுச்சியும்
5. பெண்ணிலைவாத சிந்தனையில் கூத்துக்கள்
6. மீளுருவாக்கம் பற்றிய படைப்பாளரின் அனுபவக் குறிப்பு
7. கூத்துக்களும் சடங்குகளும் ஓர் ஒப்பீட்டாய்வு

## பல்சுவை பாடல்கள்

1. பிள்ளையார் பாடல்கள்
2. மாரியம்மன் பாடல்கள்
3. நரசிங்க வைரவ சுவாமி பாடல்கள்
4. அனுமன் பாடல்
5. முருகன் பாடல்
6. கொரோனா நோய் தீர்க்கும் பாடல்
7. பல்சமூகம் சார் மரணவீடகளில் பாடும் ஒப்பாரி
8. மரணவீடுளில் பாடும் பஞ்சபுராணம்
9. நரசிம்ம சுவாமியை குலதெய்வமாகக் கொண்டு வழிபட்டு வரும் மக்கள் மரணத்தில் பாடக்கூடிய பஞ்சபுராணம்
10. கிறிஸ்தவ மரணவீடுகளில் பாடப்படும் பாடல்கள்
11. கத்தோலிக்க பாடல்கள்

## கதை / நாடகம்

1. வல்லரச நாடு - கதை
2. வணராணி – நாடகம்




மனிதர்களை
மனிதர் கொல்லும்
வாழ்க்கைதன்னை
வெற்றியென்றோம்
மனிதருடன்
மனிதர் வாழும்
வாழ்க்கையல்லோ
வெற்றியாகும்
(கூத்து மீளுருவாக்கப் பாடல்)
மூன்றாவதுகண்


கூத்தாடுவதும் குந்திநெளிப்பதும்
ஆத்தாதவன் செயல்?!
அல்ல!
கூத்தாடுவதும் குதிபோடுவதும்
ஆற்றலுள்ளவர் செயல்!!!